**செ.வெ.எண்:43** **நாள்:16.08.2021**

## நாமக்கல் மாவட்டம்

## காணொலி காட்சி வாயிலாக மக்கள் குறைத்தீர் கூட்டம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

-----

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், காணொலி காட்சி வாயிலாக மக்கள் குறைத்தீர் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (16.08.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மனுதாரர்களுடன் காணொலி காட்சி மூலம் கலந்துரையாடி, அவர்களின் குறைகளை கேட்டறிந்ததுடன், மனு சம்மந்தமான துறையினரை காணொலி காட்சி மூலம் தொடர்பு கொண்டு உடனடியாக தீர்வு வழங்க அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் 8 வட்டாட்சியர் அலுவலகங்கள், 15 வட்டார வளர்ச்சி அலுவலகங்கள், 5 நகராட்சி அலுவலகங்கள், 19 பேரூராட்சி அலுவலகங்கள் என மொத்தம் 47 இடங்களில் இருந்து 11 மனுதாரர்கள் காணொலி காட்சி மூலம் கலந்துகொண்டு, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, பட்டா மாறுதல், வாரிசுச்சான்றிதழ், வங்கி கடன் உதவி, குடிசை மாற்று வாரிய வீடு, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டி பல்வேறு கோரிக்கைகளை மனுக்களாக அரசுத்துறை அலுவலர்களிடம் வழங்கினார்கள்.

அதனைத்தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், சின்னக்காவூரை சேர்ந்த திரு.அ.துரைசாமி என்ற பயனாளிக்கு வாரிசுரிமைச் சான்றிதழை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். மக்கள் குறைதீர்க்கும் நாள் முகாமில் அனைத்து துறை அலுவலர்கள் தங்கள் அலுவலகங்களில் இருந்து காணொலி காட்சி மூலம் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்கா மூர்த்தி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) திரு.வி.ரமேஷ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.மோகனசுந்தரம், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திரு.வீ.சக்திவேலு உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.